# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337, மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 191/மா/2022**
**நாள் : 22.12.2022**

திரு. சாஜாகுணா, – முறையீட்டு மனுதாரர்
சென்னை- 600 026.

மண்டல அலுவலர், – எதிர்மனுதாரர்
மண்டலம் - 5, பெருநகர சென்னை மாநகராட்சி.

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கங்கையம்மன் காலனி, 2வது தெரு, எண்.1/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சாஜாகுணா என்பவரின் 19.10.2022 நாளிட்ட மனு 20.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 191/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கங்கையம்மன் காலனி 2வது தெரு, எண்.1/1, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சாஜாகுணா என்பவரின் முறையீட்டு மனுவில்,

> “பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகம், மண்டலம்-5 வார்டு-62, சிந்தாதரிபேட்டை, ரிச்சி தெரு, கதவு எண்.12 மற்றும் அத்திபட்டான் தெரு, எண்.8ல் விதிமுறைகளை மீறி வாகனம் நிறுத்த வசதியின்றி தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டப்பட்டு வந்த அடுக்குமாடி வணிக கட்டுமானத்தின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 18.08.2022 அன்று பதிவு அஞ்சல் மூலம் புகார் அனுப்பியிருந்தேன். அந்த புகார் மனு மீது நாளது தேதிவரை எவ்வித நடவடிக்கையும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எடுக்கவில்லை. இது தொடர்பாக சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மாநகராட்சி விதிமுறைகளை கடைபிடிக்கா விட்டாலும் நீதிமன்றத்தின் அறிவுரைகள் மற்றும் உத்தரவுகளை மதித்தாவது நடவடிக்கை எடுங்கள் என்று 07.11.2022 அன்று மீண்டும் நினைவுப்படுத்தி சமூக வலைத்தளத்தின் வாயிலாக சென்னை மாநகராட்சி சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நினைவூட்டல் செய்தேன். ஆயினும், இன்றைய தேதிவரை ஒரு சிறு நடவடிக்கைக்கூட சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எடுக்க முன்வரவில்லை. ஆகவே உயர்திரு தலைவர் அவர்கள், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், அவர்களின் கவனத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கிறேன்’’ என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5ன் மண்டல அலுவலருக்கு 31.10.2022 நாளிட்ட கடிதம் இம்முறை மன்றத்தால் அனுப்பப்பட்டது. அவர் தனது 15.12.2022 நாளிட்ட அறிக்கையில் :

திரு. சாஜாகுணா அவர்கள் தனது புகார் மனுவில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அனுமதி பெறாமலும் சம்மந்தப்பட்ட துறையின் தடையின்மை சான்று பெறாமலும், சென்னை ரிச்சி தெரு மற்றும் அத்திப்பட்டான் தெருவில் சட்டவிரோதமாக கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டுமானத்தை கள ஆய்வு செய்து தடை செய்யக்கோரி மனு அளித்துள்ளார்.

கதவு எண்.12, ரிச்சி தெரு, சித்தாதிரிப்பேட்டை, இக்கட்டிடத்தின் உரிமையாளர் திருமதி. M.A.M. மீரா சாஹிப் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5ன் மூலம் திட்ட அனுமதி எண்.PPA/WDCN 05.06463.2016 மற்றும் கட்டிட அனுமதி எண்.BA/WDCN 05/01236/2017 நாள்:06.03.2017 வாகன நிறுத்தம் மற்றும் 2 வணிக தளங்கள் கட்டுவதற்காக அனுமதி பெற்றிருந்தார்கள். கட்டட உரிமையாளர் பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டிக்கொண்டிருந்தார். பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர், வார்டு – 62 அவர்களால் கட்டிடம் கள ஆய்வு மேற்கொண்டு 05.09.2022 அன்று வேலை நிறுத்தம் / வரைபடம் சமர்ப்பிக்க தாக்கீது (எண்.D.No.62/081/2022) வழங்கப்பட்டு மீண்டும் உதவி பொறியாளர் கள ஆய்வு மேற்கொண்டதில் கட்டடத்தில் சில விதிமீறல்கள் கண்டறியப்பட்டு, பூட்டி சீல் வைப்பதற்கான தாக்கீது 18.11.2022 நாளிட்ட தாக்கீது (தாக்கீது எண். DN62/082/2022) மனுதாரரால் 21.11.2022 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. கட்டட உரிமையாளர் முன்பக்க இடைவெளியும், மாடிகள் அனைத்தும் வரைபட அனுமதிக்குட்பட்டு, வரைபட அனுமதிபடி கட்டியுள்ளார். ஆனால், வாகன நிறுத்தத்தில் கடைகள் அமைத்திருந்தார். மேற்கண்ட தாக்கீதின் காலம் முடிவடைந்தவுடன், கட்டடம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கதவு எண்-8, அத்திப்பட்டான் தெரு, சித்தாதிரிப்பேட்டை, என்ற இடத்தில் புதியதாக கட்டடம் கட்டுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் மூலம் திட்ட அனுமதி எண்:PPA/WDC No.5/05152/2021 மற்றும் கட்டட அனுமதி எண்.BA/WDC No.5/04509/2021 நாள்:10.08.2021 வாகன நிறுத்தம் மற்றும் 3 வணிக தளங்கள் கட்டுவதற்காக அனுமதி பெற்றிருந்தார்கள். அதன்படி கட்டட உரிமையாளர் புதியதாக கட்டடம் கட்டிக்கொண்டிருந்தார். பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர் வார்டு 62 அவர்களால் கட்டடம் 10.5.2022 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வேலை நிறுத்த வரைபட சமர்ப்பிக்க தாக்கீது வழங்கப்பட்டது. (தாக்கீது எண். D.N.62/061/2022).

மீண்டும் கள ஆய்வு செய்யப்பட்டதில், சில விதி மீறல்கள் இருப்பதை தொடர்ந்து பூட்டி சீல்வைப்பதற்கான, 23.08.2022 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டது. (தாக்கீது எண். D.N.62/080/2022) இந்த தாக்கீது வரைபடத்திற்கு விதிமீறிய பகுதிகள் சரிசெய்ய கோரப்பட்டது. அதனை தொடர்ந்து De-Occupation 27.10.2022 நாளிட்ட தாக்கீதை (தாக்கீது எண்.D.N.62/092/2022) கட்டட உரிமையாளர் 29.10.2022 அன்று பெற்று கொண்டார். இக்கட்டட உரிமையாளர் வாகன நிறுத்தத்தில் கடைகள் அமைத்திருந்தார். மேற்கொண்டு

அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகம், மண்டலம்-5 வார்டு 62, சிந்தாதிரிபேட்டை, கதவு எண்.12 ரிச்சி தெரு மற்றும் கதவு எண்.8, அத்திப்பட்டான் தெரு, ஆகியவற்றில் கட்டப்பட்டு வரும் கட்டுமானம் மீது மனுதாரர் திரு. சாஜா குணா அவர்கள் 18.08.2022 நாளிட்டு அளித்த புகார் மீது, உதவி பொறியாளர் அவர்கள் மேற்கண்ட இடத்தினை கள ஆய்வு மேற்கொண்டதால், அப்புகார் மனுவினை திரும்ப பெற்று கொள்கிறேன் என்று 6.12.2022 மற்றும் 14.12.2022 நாளிட்ட கடிதங்கள் மூலம் மண்டல அலுவலர், மண்டலம்-5, செயற் பொறியாளர், மண்டலம்-5, மற்றும் உதவி பொறியாளர் வார்டு -62, அவர்களுக்கு தெரிவித்துள்ளார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 19.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

முறையீட்டு மனுதாரர் 19.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

**19.12.2022 அன்றைய நேரடி விசாரணையில் மண்டலம்–5ன் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப்பொறியாளர் ஆகியோர் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்தனர்** :

சென்னை, வடபழனியைச் சேர்ந்த திரு சாஜா குணா என்பவர் மண்டலம்–5, வார்டு-62, சிந்தாதிரிபேட்டை, ரிச்சி தெரு, கதவு எண்.12 மற்றும் அத்திபட்டான் எண்.8இல் வாகன நிறுத்த வசதியின்றி விதிமுறைகளை மீறி கட்டடம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து புகார் மனு அளித்து இருந்தார்.

"இம்மனு மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ரிச்சி தெரு, கதவு எண்.12ன் கட்டட உரிமையாளருக்கு 05.09.2022 அன்று வேலை நிறுத்தம்/ வரைபடம் சமர்ப்பிக்க தாக்கீது வழங்கப்பட்டது. மேலும் 18.11.2022 அன்று பூட்டி சீல் வைப்பதற்கான தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. தாக்கீதின் காலம் முடிவடைந்தபின் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அத்திப்பட்டான், கதவு எண்.8-இல் கட்டப்பட்டுவரும் கட்டிடத்திற்கு 10.05.2022 அன்று வேலை நிறுத்தம் / வரைபடம் சமர்ப்பிக்க தாக்கீது வழங்கப்பட்டது. 23.08.2022 அன்று மேற்கண்ட கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்கான தாக்கீது வழங்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் 27.10.2022 நாளிட்ட De-Occupation தாக்கீதை 29.10.2022 அன்று கட்டட உரிமையாளர் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து மேல் நடவடிக்கை மேற்கொள்ள மண்டல அலுவலகத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், 15.12.2022 நாளிட்ட மண்டல அலுவலரின் அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்தகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகம், மண்டலம்-5, வார்டு எண்.62, சிந்தாதரிபேட்டை, ரிச்சி தெரு, கதவு எண்.12 மற்றும் அத்திபட்டான் தெரு, எண்.8 ஆகியவற்றில் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்து அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி இருந்தார்.

ரிச்சி தெரு, கதவு எண்.8ல் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி பொறியாளரால் கள ஆய்வு செய்யப்பட்டு 5.9.2022 அன்று வேலை நிறுத்தம் / வரைபடம் சமர்ப்பிக்க தாக்கீது வழங்கப்பட்டு, அதன்பின்னர் அனுமதி பெற்ற வரைபடத்துக்கு மாறாக, அக்கட்டடத்தில் சில விதி மீறல்கள் கண்டறியப்பட்டு, அக்கட்டடத்தை பூட்டி சீல் வைக்க 18.11.2022 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும் அறியப்படுகிறது. மேலும், அத்திப்பட்டான் தெரு, கதவு எண்.8ல் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி பொறியாளர் கள ஆய்வு செய்து, வேலை நிறுத்தம் / வரைபடம் சமர்ப்பிக்க 10.5.2022 அன்று தாக்கீது வழங்கப்பட்டு, அதன் பின் அனுமதி பெற்ற வரைப்படத்திற்கு மாறாக அக்கட்டடத்தில் சில விதி மீறல்கள் கண்டறியப்பட்டு, அக்கட்டத்திற்கு பூட்டி சீல் வைப்பதற்கான தாக்கீது 23.8.2022 அன்று வழங்கப்பட்டும், அதனை தொடர்ந்து 27.10.2022 அன்று De-Occupation தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளதும் அறியமுடிகிறது. மேலும், மனுதாரர் மண்டல அலுவலர்களுக்கு முகவரியிட்ட 6.12.2022 மற்றும் 14.12.2022 நாளிட்ட கடிதங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி பொறியாளர் கள ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்ததால் தன்னுடைய 18.8.2022 நாளிட்ட புகார் மனுவினை திரும்பப்பெற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளதையும் அறியமுடிகிறது.

மேற்கண்ட நிகழ்வில் விசாரணைக்குப்பின் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

பெருநகர சென்னை மாநகராட்சி, சிந்தாதிரிப்பேட்டை, ரிச்சி தெரு, கதவு எண்.8ல் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தை, மனுதாரர் இம்முறைமன்றத்திற்கு 19.10.2022 நாளிட்ட புகார் மனு அளிக்கும் முன்னரே, 05.09.2022 அன்று மண்டலம்-5ன் உதவி பொறியாளர் கள ஆய்வு செய்து முதல் நிலை தாக்கீது வழங்கப்பட்டும், தொடர் நடவடிக்கை எடுத்ததும், மற்றும் அத்திபட்டான் தெரு 8-ல் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தை கள ஆய்வு செய்து 10.5.2022 அன்று முதல் நிலை தாக்கீது வழங்கப்பட்டும் அதனை தொடர்ந்து வழங்கக்கூடிய தாக்கீதுகள் அளிக்கப்பட்டதையும் இம்முறைமன்றம் வரவேற்கிறது. இருப்பினும், மேற்கண்ட இரண்டு இடங்களிலும் வழங்கப்பட்ட தாக்கீதுகளை தொடர்ந்து, மீண்டும் கள ஆய்வு மேற்கொண்டு, அனுமதிபெற்ற வரைபடத்தின்படி அக்கட்டடங்கள் கட்டப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்திடவும், மேலும், சட்டப்பூர்வமான தொடர் நடவடிக்கை எடுக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர், இம்முறைமன்றத்திற்கு 19.10.2022 நாளிட்ட புகார் மனு அளித்துவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் அலுவலர்களுக்கு முகவரியிட்ட தன்னுடைய 6.12.2022 மற்றும் 14.12.2022 நாளிட்ட கடிதங்களில் புகார் மனுவினை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். ஆனால், இது குறித்து இம்முறை மன்றத்திற்கு முறையாக தெரிவிக்கவில்லை.

இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்து, அம்மனு மீது விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டி கடிதம் அனுப்பப்பட்டும், எவ்வித உரிய காரணம் தெரிவிக்காமல், விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததை, இம்முறைமன்றத்தின் மாண்பை குறைக்கும் செயலாக கருதி இம்மன்றம் வண்மையாக கண்டிக்கிறது. மேலும், 2014-ஆம் ஆண்டைய தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் இம்முறைமன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்தை வழங்கியுள்ள நிலையில், இம்முறைமன்றத்திற்கு புகார் மனு அளித்து, விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததையும் இம்முறைமன்றத்தின் நேரத்தை வீணடித்ததை கருத்தில் கொண்டும், மனுதாரரால் இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்படும் புகார் மனுக்கள், 6 (ஆறு) மாத காலத்திற்கு ஏற்கப்படாது என்று முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. சாஜாகுணா,
   எண்.1/1, கங்கையம்மன் காலனி,
   2வது தெரு, வடபழனி, சென்னை – 600 026.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. துணை ஆணையர், (பணிகள்)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
4. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   61, பேசின் பிரிட்ஜ் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600021.
5. துணை ஆணையர்,
   மண்டலம் - 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   61, பேசின் பிரிட்ஜ் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை,
   காமராஜர் நகர், கலைஞர் கருணாநிதி நகர்,
   சென்னை – 600021.
   } *He is requested to ensure the implementation of this order*
6. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

27/12/22

செயலாளர்.

27/12/22